சிவமயம்

gistered as a News paper in Ceylon
P. M. G. NO. H. A 89/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருஅ] யாழ்ப்பாணம்—வியஹு மாசி மீ உஉ (1947 பெப்ரவரி 14 வெள்ளிக்கிழமை) [இல அசு

## அழகு வழிபாடு

[எஸ். டி. ஆதித்தன், எம் எல். ஏ.]

அழகு என்றால் என்ன, என்பதைப்பற்றிய அபிப்பிராய பேதம் எத்தனைதான் இருந்தபோதிலும் அதே விஷயத்தில் அபிப்பிராய ஒற்றுமை எவ்வளவு தூரம் இருக்கிறது என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. உண்மையிலே, அபிப்பிராய பேதம் குறைவு, ஒற்றுமைதான் ஜாஸ்தி. கடல் அலையின் அழகும், அந்த அலையின்மேலே தவழ்ந்துவிளையாடுகிற நுரையின் சௌந்தரியமும் மலர்களின அலங்காரமும், மலர்களின் ஊடே தவழ்ந்து விளையாடும் வண்ணாத்திப் பூச்சியின் ஒய்யாரமும், இவைகள் எல்லாம் யாருடைய மனதைத்தான் வசீகரிக்காமல் விட்டுவைக்கு? வான வில்லின் அழகைப் பற்றியும் அந்திவேளை அடிவானத்தின் லாவண்யத்தைப்பற்றியும் அபிப்பிராய பேதத்திற்கு இடம் ஏது?

ஆகவே, ஒருவிஷயம் தெளிவாகத் தெரிகிறது. அதாவது அழகு என்றால் என்ன என்பதுபற்றி, மேலெழுந்தவாரியாகக் கவனிக்கும்போதுசிற் சில அபிப்பிராயபேதங்கள் தென்பட்டபோதிலும், அந்த விஷயமாகஅடிப்படையிலே பெரும்பாலானமக்களுக்குள்ளே ஒற்றுமையான அபிப்பிராயம்தான் இருந்துவருகிறது. இந்த அடிப்படை ஒற்றுமையை அஸ்திவாரமாகக்கொண்டுதான் மக்கள் சமூக வாழ்விலே தங்கள் தங்கள் சமூகத்திற்கென்று கலைகளை ஸ்தாபித்துக் கொண்டார்கள்.

உதாரணமாக, நம்முடைய இந்திய சமூகத்தையே எடுத்துக்கொள்வோம். இயற்கையின் அழகு எங்கெங்கே மிகவும் ரமணீயமாக இருக்கிறதோ, அங்கங்கேதான் ஆலயங்களைநிர்மாணிப்பது தொன்றுதொட்டு இந்தநாட்டில் வழக்கமாக இருக்கிறது. மலை உச்சியிலே அருவிக் கரையிலே, அல்லது கடல் ஓரத்திலே நம்முடைய எண்ணிறந்த கோவில்களையும் பள்ளிவாசல்களையும் கட்டியிருக்கிறோர். அவைகள் அமைந்திருக்கிற இடங்களினுடைய இயற்கையழகே மனிதர்களின் மனதைத் தன்வசப்படுத்தி, சாந்தமும் நிம்மதியும் கொடுக்கக்கூடியதாக இருக்கிறது.

இதையேபோல, நம் இந்திய ஜனங்களிடத்திலே இன்னொரு சம்பிரதாயமும் இருந்துவருகிறது. அதாவது, நம்முடைய தினசரி வாழ்க்கையிலே கலைக்கு, சங்கீதத்திற்கு, அழகிற்கு, ஒரு பிரதான ஸ்தானம் கொடுத்து வருகிறோம். எத்தனையோ சொல்லலாம் உதாரணங்கள்.

நம்முடைய தேசத்துப் பெண்கள், ஜடை பின்னிக்கொண்டு, அதிலே ஜடைநாகம் வைத்து, அதைச்சுற்றிலும் பல வர்ணப் புஷ்பங்களைச் சூட்டிக்கொள்வது, எவ்வளவு அலங்காரமாக இருக்கிறது, யோசித்துப்பாருங்கள். உண்மையிலேயே, இந்த அலங்காரத்திலே கவிதை ஊறிக்கிடக்கிறது என்றுதான் சொல்லவேண்டும். நம்முடைய பெண்களினுடைய சேலைகளின் வர்ணங்களும், அதையவர்கள் கட்டிக்கொள்ளுகிற அலங்காரமும், இந்த அலங்காரத்துடன் செப்புக்குடம் ஏந்தி இடை துவண்டுவரக் கைவீசி நடந்துவருகிற ஒய்யாரமும் பெண்மைக்கே ஒரு அலாதி சௌந்தரியத்தைக் கொடுக்கின்றன. அந்தச் செப்புக் குடங்களிலும் சேலைகளிலுந்தான் எத்தனை விதம்விதமான பூக்கள், சித்திரங்கள், கிளிகள் மயில்கள், அன்னங்கள் அவைகளில் சிலசமயங்களிலே தோன்றுகிற கற்பனைத் திறமைக்கு ஈடு நான் வேறே எங்கேயுமே கண்டதில்லை.

அன்றாட வாழ்க்கையிலே நாம் கலையை, அழகைப் பிணைத்திருப்பதற்கு, இன்னும் எத்தனையோ உதாரணங்கள் சொல்லலாம். வீட்டு முற்றத்திலே, தெருவாசலிலே மாவினாலே போடுகிற கோலம், மாலையிலே குழந்தைகளுக்காகப் பாடுகிற தாலாட்டு, கேணியிலே ஏற்றம் மிதிக்கிறபோதும், வயலிலே நாற்றுநடுகிறபோதும் பாடுகிற நாடோடிப்பாட்டுகள், இன்னும் இப்படியே உதாரணங்களை அடுக்கிக்கொண்டே போகலாம்.

தன்னைச் சுற்றியிருக்கிற பொருள்களை அழகுபடுத்திக் கொள்வதிலே ஏற்படுகிற அலாதி இன்பம், அவ்விதம் அவைகளை அழகுபடுத்தி அனுபவித்தவர்களுக்குத்தான் தெரியும். பாட்டியம்மாள் வைத்திருக்கிற வெற்றிலைச் செல்லத்தின் அழகும், அதில் இருக்கிற சுண்ணாம்புக் கரண்டகத்தின் அழகும், கரண்டகத்தின் பக்கத்தில் காத்துக்கொண்டிருக்கிற பாக்குவெட்டியின் அழகும், பாக்குவெட்டியின் தலைப்பிலே செதுக்கியிருக்கிற யாழி முகத்தின் அழகும், இத்தனையும் இந்தச் சாமான்களை அந்தக் காலத்தில் வாங்கிவைத்த பாட்டிக்குத்தான் தெரியுமே தவிர மற்றவர்கள் உணர்ந்து கொள்வது சிரமந்தான்.

நம்முடைய வீடுகளிலே நான் பார்த்த பொருள்கள் அத்தனையிலும் மிக மிக அழகுவாய்ந்தது பழைய காலத்துக் குத்துவிளக்குத்தான். குத்துவிளக்கின் உயரமும், பருமனும், சுற்றளவும், அலங்கார வேலைப்பாடுகளும் சிற்ப சாஸ்திரத்தின் உயர்ந்த இலக்கணங்களுக்கு இசைவாக அமைந்திருக்கின்றன. காணும்தோறும், தெவிட்டாத அழகு நிறைந்து, பல நூறு ஆண்டுகளாக, பல்வேறு நாகரிகங்களை அனுஷ்டித்துவருகிற, பற்பல தலைமுறைகளைச் சேர்ந்த கோடானுகோடி ஜனங்களின் பலதிறப்பட்ட அழகு உணர்ச்சியைத் திருப்தி செய்துவந்திருக்கும் பொருள்களில் அழகுக் களஞ்சியமான ஆனால் அற்பப்பொருளான—இந்தக் குத்துவிளக்குக்கு ஈடாக வேறு எந்தப் பொருளையும் சொல்லக்கூடியதில்லை.

## எஜமானரா? ஊழியரா?

### பொலிசாருடைய கடமைகள்

சென்னைமாகாணத்துப் பொலிஸாரின் வருடாந்த பவனி சென்றவாரம் நிகழ்ந்தபோது, அம்மாகாணத் தேசாதிபதி சேர். ஆர்ச்சிபல்ட் நை என்பவர், பொலிசர் ஆற்றவேண்டிய பணிகளைத் தெருட்டினார். பொலிசராகவுள்ளவர், தாம் பொதுஜனங்களின் ஊழியரேயன்றி எஜமானர் அல்ல என்பதை உணரவேண்டும் என்று தேசாதிபதி குறிப்பிட்டார். அவர் கூறியதாவது:

"பொலிசார் முதன் முதலாவதாக ஜனங்களால் தெரிந்தெடுக்கப்பட்டு ஜனங்களுக்குப் பொறுப்புள்ள அரசாங்கத்துக்கு விசுவாசமுள்ளவர்களாக நடக்கவேண்டும். ஜனங்களின் நலவுரிமைகளைப் பாதுகாக்கவே பொலிசர் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். அப்படியான பொலிசார்க்குச் சில சமயங்களில் சில அதிகாரங்களும் அவர்களிடம் கொடுக்கப்பட்டிருக்கலாம், ஆனால் அந்த அதிகாரத்தை மிக்க சாவதானமாக உபயோகித்தல் வேண்டும். அதிகாரம் வந்துவிட்டதே என்று மமதைகொள்ளக் கூடாது: ஜனங்களோடு கண்ணியமாகவும் மரியாதையாகவும் ஊடாடவேண்டும். அதிகாரம் இருப்பதனால் ஜனங்களுக்குக் கட்டளையிடவோ வெருட்டவோ நினைத்தலாகாது.

"பொலிசார் ஊரவர்களில் தாமும் சேர்ந்தவர் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். பொலிசார் 'எங்களுடைய பாதுகாவலர், எங்களின் நன்மையை விரும்புபவர்கள்' என்ற ஓர் மனப்பான்மை பொதுஜனங்களிடம் தம்மைப்பற்றி விருத்தியடையத்தக்கதாக அவர்கள் நடக்கவேண்டும்.

"இந்த நாட்டில் உள்ள எவருக்கும், அவருடைய சாதி, சமயம், செல்வநிலை என்பவற்றைப் பார்க்காது பாதுகாப்பளிக்கவேண்டியது பொலிசாரின் பிரதான கடமை. ஓர் அரசாங்கம் நிலைத்திருக்கவேண்டுமானால் அதன் பொலிஸ்தாபனம் விசுவாசமுள்ள ஓர் நிலையமாக இருத்தல் வேண்டும்.

"அரசாங்கத்துக்கு எதிராக உங்களைச் சிலர் கிளர்ச்சி செய்யுமாறு தூண்டவும் கூடும், அப்படியான கலகக்காரர் வார்த்தையைக் கேட்கவொண்ணாது. அதனால், உங்கள் நாட்டுக்கே நட்டம் நேரிடும்"

## அவர்கள் எங்கே?

### காணமற்போன யுத்தக் கைதிகள்

யுத்தகாலத்திலே நேசக் கட்சியினராற் சிறைப்படுத்தப்பட்ட சிறையாளர் மூன்று லட்சம் பேர் எங்கிருக்கிறார்களென்ற சந்தேகம் இரண்டாம் யுத்த முடிவுகாலத்திலே பிறந்ததல்லவா; அந்தச் சிறையாளர் எங்கிருக்கிறார்களென்பதும் என்ன செய்கிறார்களென்பதும் இப்பொழுது வெளிப்படலாயின; இந்த மூன்று லட்சம் சிறையாளர்களும் ஜர்மனிய, யப்பானிய, இத்தலிய, ஹங்கேரிய, வினிஸிய படைகளைச் சேர்ந்தவர்களாவர்; இவர்களை அடிமைகள்போல ருஷியர் பெருந் தெருக்கள் திறத்தற்கும் புகைரதப்பாதைகளைத் திறத்தற்கும் கூலிகளாகக் கொண்டிருக்கின்றார்களாம்: இவர்களுட் பெண்பாலினரே கூடிய தொகையினராம்; இப்பொழுது ஐரோப்பிய ருஷியாவிலிருந்து ஆசிய ருஷியாவின் அந்தத்திலுள்ளதாகிய சைபீரியாநாட்டிற்கு மிக நீண்ட புகைரதப்பாதையையும் அதன் தென்திசை வடதிசைகளில் இரு நீண்ட தெருக்களையும் ருஷியர் இச்சிறையாளரைக் கொண்டு திறப்பிக்கின்றனராம். நாள்தோறும் 8 மணி நேரம் இவர்கள் வேலைசெய்யவேண்டும்; இவர்களுக்கு நாட்கூலி 6 றூபிள்ஸ், அதாவது 50 சதமாகுமெனச் சைபீரிய பத்திரிகை யொன்றில் வெளியிடப்பட்டிருக்கின்றது.

## பர்மா நிலை

### அதிர்ப்தி பரவுகிறது

சேனாதிபதி ஆங்ஸேனும், பர்மா இடைக்கால அரசாங்கத்தில் உள்ள அவரது சகாக்கள் சிலரும் லண்டன் சென்று, அங்கு பிரிட்டிஷ் பிரதமர் அட்லியுடன் சம்பாஷணைகள் நிகழ்த்தி பர்மாவின் எதிர்கால அரசியல் விஷயமாக ஓர் உடம்படிக்கை செய்து மீண்டனர்.

இந்தச் சமரச உடன்படிக்கை, பர்மிய தீவிரவாதிகளுக்கு வெறுப்பைக் கொடுத்திருக்கிறது. இடைக்கால அரசாங்கத்தில் உள்ள இரு மந்திரிகள் விலகிவிட்டனர். பிரிட்டின் ஏகாதிபத்தியவாதிகளிடம் பர்மாவைக் காட்டிக் கொடுத்துவிட்டார் ஆங்ஸேன் என்று இவர்கள் குற்றம் சாட்டுகின்றனர். ஆங்ஸேனுக்கு விரோதமாக ஓர் பலம் வாய்ந்த கட்சியையும் தாபிக்க இப்போது அவர்கள் முயற்சிக்கிறார்கள்.

## திருடிக்கு ஒரு வருடம்

உடாமுலையைச் சேர்ந்த மிஸ்ரர் ஜான்ஸென் என்பவருடைய வீட்டுக்குட் புகுந்து ஆபரணங்களைக்களவாடினாள் என்று லீலாவதி பெரீராஎன்னுஞ்சிங்களப்பெண் சென்றவாரம் கொழும்பு நீதிஸ்தலத்தில் ஒருவருடச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டாள்.

ஏனைய புதினங்கள்
6-ம் பக்கத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், வியஇ
மாசிமீ உ௨ வெள்ளிக்கிழமை

## சமய நூற் கல்வி

II

ஆனாலும் இக்காலத்தில், உபாத்தியாயர்களும் மாணுக்கரும், பெற்றோருமாகிய எல்லாரும், சைவசமயக் கல்வியை அலட்சியஞ் செய்து, தாங்கள் சீவனார்த்தமான கல்வியையே பயிற்றவும், பயிலவும், பயிற்றுவிக்கவுந் தலைப்பட்டுக் கொண்டனர்; மேலும் இங்கேயெடுத்துக் காட்டப்படும் இந்த மூப்பாலாரும், சமய அநுட்டானங்களைச் சிரத்தையோடு கிரமமாகச் செய்து வருதலையும் மெல்ல மெல்லக் கைவிடலாயினர்; இக்காலத்திலும் சிலர் இதற்குப் புறநடையினராய்த் தம் சமய அநுட்டானங்களையும் பழைய சிறந்த ஒழுக்க முறைகளையும் கைவிடாதிருக்கின்றனரென்பதும் நிசம்; ஆனால் இப்படியிருப்போர் நூற்றுக்குப் பத்து விகிதத்தைக் காட்டிலும் குறைந்தவர்களாய் விட்டனரெனலாம். இளமையிலேயே சமயக் கொள்கையும் சமயபோதனையு மில்லாதவர்கள் காலகதியில் அவைகளைக் கைக்கொண்டொழுகி ஈடேறுவரென்பது சந்தேகம்; ஆனதினாலே சமய அநுட்டானமும் சமயபோதனையும் பிள்ளைகட்கு இளம் பராயந்தொட்டே பயிற்றப்படல் வேண்டும்.

இந்த இரண்டனுள் சமய அநுட்டானத்தைப் பிள்ளைக்குப் பயிற்றவேண்டியவர்கள் அப்பிள்ளைகளின் பெற்றோர் பெரியோராவர்; சமயநூற் கல்வியைப் பிள்ளைகளின் பிராயத்திற்கு ஏற்பப் பக்குவமறிந்து போதிக்கவேண்டியவர்கள் உபாத்தியாயர்களென்றே சொல்லல் வேண்டும்; இந்த இரு செயலும் இவர்களாற் செய்யப்படா தொழியின் பிள்ளைகளிடத்துச் சமயப்பற்று உதிப்பது அரிதெனலாம்.

ஒருவருக்குக் கல்வி, கேள்வி, கோயிற்பழக்கம் என்னும் மூன்றும், அவர் ஈடேறும் விஷயத்தில் இன்றியமையாதன வெனப் பெரியோர் சொல்லுவர்; இம்மூன்றனுள் இறுதியி லுள்ளதாகிய கோயிற் பழக்கம் விரைவிலும் இலகுவிலும் பயிலத்தக்கதன்று; இதுவும் பெற்றோர் முயற்சிகொண்டே பிள்ளைகள் அடையத் தக்கதாகும்; ஆதலினாலே சமய அநுட்டானத்தைத் தம் பிள்ளைகட்குப் பயிற்ற விரும்பும் பெற்றோர் பெரியோர், தாமே சமய அநுட்டானத்தைக் கிரமமாகச் செய்துவரல் வேண்டும்; தந்தை தாயரிடத்தில் ஸ்நாநம், சந்தியாவந்தனை, ஆலயவழிபாடு, விரதங்காத்தல் முதலிய சமயாநுஷ்டானங்கள் கிரமமாக இல்லையாயின், அவர்கள் பெற்ற பிள்ளைகளிடத்தில் அவை காலகதியில் வந்து கைகூடுமென நாம் எப்படிக் காத்திருக்கலாம்? நன்மையாக, தீமையாக பெற்றோர் செய்வனவற்றையே பின்பற்றிச் செய்தல் பிள்ளைகளின் இயல்பென்பது எவரும் அநுபவத்திற் கண்டதாகும்; இப்பிரபஞ்ச வாழ்க்கையை இலகுவாக நடத்திக் கழிப்பதற்குத் தெய்வத்தில் நம்பிக்கையும் சிவசிந்தனையும் எப்பொழுதும் இருத்தல் வேண்டும்; "சிவாய நம வென்று சிந்தித் திருப்போர்க்கு அபாயம் ஒருநாளுமில்லை … …" எனப் பெரியோர் பணித்திருப்பதும் இக்காரணம்பற்றியேயாம்; பெற்றோர் இப்படிச் சமய ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து ஒழுகுதலினால் தாம் மாத்திரமல்லர், தம்மோடு தம்பிள்ளைகள் பிற்சந்ததியாரும் ஈடேறுதற்குக் காரணராகின்றார்கள்.

இப்படிச் சமய விஷயத்தில், தம்மிடம் படிக்கும் மாணுக்கரை நன்னிலைப்படுத்த வேண்டுமென்ற உபாத்தியாயர்கள், சமயப்பிரவேச மெனப்படும் முதலாந் தீக்ஷையாயினும் பெற்றவர்களாய், ஸ்நாநஞ் செய்து சந்திவந்தனை முடித்துத் தூயஉண வுண்ணும் நியதி பூண்டவர்களாய், நன்னூலில் ஆசிரியருக்கெனச் சொல்லப்பட்ட "குலனருள் தெய்வங்கொள்கை மேன்மை கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை…." முதலாங் குணங்களுட் பெரும்பான்மையன வாய்ந்தவராய், ஆலய வழிபாடு, விரதங் காத்தல் முதலிய கிரியைகளோடு கூடியவர்களாய், சமய நூலுணர்ச்சி யுடையவர்களாயிருந்தாற்றான்; தம்மிடத்துப் படிக்கும் பிள்ளைகட்குச் சமயக் கல்வியை ஊட்டவும் சமய ஒழுக்கத்தைக் காட்டவும் இயன்றவராவர்; ஒரு வித்தியாசாலையிலோ, கல்லூரியிலோ எல்லா ஆசிரியர்களும் இங்ஙனம் ஒழுகுதல் இயலாதெனக் காணின், தமிழ்க் கல்வியும் சமயமும் படிப்பிக்கும் ஆசிரியர்களேனும் மேலேசொல்லப்பட்ட குணமுஞ் செயலும் பூண்டவரா யிருத்தல் வேண்டும். சைவ கலாசாலைகள் கல்லூரிகளை வைத்துநடாத்தும் அதிபர்களும், அதிகார சபையினரும் தங்கள் கலாசாலையிலாக, கல்லூரியிலாக உபாத்தியாயர்களை நியமனஞ் செய்யும்போது மேலே சொல்லப்பட்ட குணஞ் செயல்கள் அந்த உபாத்தியாயர்களிடத்தில் உளவோ என்பதை முந்தியே ஆராய்ந்தறிந்து நியமனஞ் செய்தல் வேண்டும்; இந்த யாழ்ப்பாணத்திலே, இப்படியான குணஞ் செயலுள்ள உபாத்தியாயர்களையே தம் வித்தியாசாலையில் ஆசிரியராக நியமிப்பதென்ற நியதியுள்ள வித்தியாசாலை யதிபர்கள் சிலரினுஞ் சிலர் இன்றும் இருக்கின்றார்கள்.

# இந்திய அரசியல்

### அங்கீகரிப்பரா?

அமெரிக்காவிலே இந்திய சங்கத்தின் தலைவராகவுள்ள சர்தார் ஜே. ஜே. சிங் இப்போது இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ளார். அவர் சென்ற வாரம் கல்கத்தாவுக்கு விஜயம் செய்து, இந்திய அரசியல் சம்பந்தமான நெருக்கடிபற்றி அவர் பின்வருமாறு குறிப்பிட்டார். காங்கிரஸ், பிரிட்டிஷ் அரசாங்கத்தின் வியாக்கியானத்தை ஏற்றுக்கொண்டுவிட்டது. ஆகவே இனிப் பேசுவதற்கு இடமில்லை. எனவே, லீக்கர் அரசியல் நிர்மாணசபையிற் சேர்ந்து கருமம் ஆற்றவேண்டும், அன்றேல் இடைக்கால அரசாங்கத்தை விட்டு நீங்கிவிடவேண்டும் என்று கூடிய சீக்கிரத்தில் இந்திய மந்திரி அறிக்கை விடுவார் என்று நம்புகிறேன். அப்படியான அறிக்கை விடும் பட்சத்தில், லீக்கர் கட்டாயம் அரசியல் நிர்மாணசபையிற் சேர்ந்துகொள்ளுவர். அச்சபையிலும், இடைக்கால அரசாங்கத்திலும் சேராது, லீக்கர் பிரிட்டிஷார்க்கும், காங்கிரசுக்கும் விரோதமாக நேரடிப்போராட்டம் செய்வார் என்று நினைப்பது வீண்.

●

### சமஸ்தானாதிபதிகள் இணக்கம்

சமஸ்தானாதிபதிகள் அரசியல் நிர்மாண சபையிற் சேருவதுபற்றிப் பிணங்கிக்கொண் டிருந்தனர். இப்போது அப்பிணக்குச் சமரசமாகத் தீர்க்கப்படும் உற்பாதங்கள் தோன்றுகின்றன. சமஸ்தானாதிபதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த அரசியல் நிர்மாணசபையால் நியமிக்கப்பட்ட உபசபையினர், சமஸ்தானாதிபதிகளின் உபசபையினருடன் சென்ற ஞாயிற்றுக்கிழமை 2 மணிநேரமாகச் சம்பாஷணைகள் நிகழ்த்தினர். சுதேச சமஸ்தானங்களுக்கு அரசியல் நிர்மாண சபையில் 93 ஸ்தானங்கள் உண்டு. இந்த ஸ்தானங்களுக்குரியவரை எவ்வாறு நியமிப்பது என்பது பற்றி இருஉபசபைகளின் காரியதரிசிகளும் கூடிய சீக்கிரம் ஓர் அறிக்கை விடுப்பர். சமஸ்தானாதிபதிகளும் அரசியல் நிருமாணசபையிற் சேராமல் விடுவர், அப்போது தமக்குக் கூடிய பலம் கிடைத்துவிடும் என ஜின்னா கனவு கண்டதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாம்.

●

### காங்கிரஸ் காரியசபை

காங்கிரசின் காரிய நிருவாகசபை வருகிற மார்ச்மாதம் 5-ம் திகதி புது டெல்கியிற் கூடும் என்று தெரிகிறது.

●

### பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அடுத்த செயல்

காங்கிரஸின் கேள்விக்கிசைந்து, பிரிட்டிஷ் அரசாங்கம், இடைக்கால அரசாங்கத்தில் உள்ள லீக் மந்திரிகளை விலகுமாறுசொல்லக்கூடுமென்று அமெரிக்க அரசியல் நிபுணர்கள் கருதுகிறார்கள். காங்கிரஸ் எவ்வளவு தூரம் இவ்விஷயத்தில் விட்டுக்கொடுக்கமுடியுமோ, அவ்வளவுதூரம் விட்டுக்கொடுத்த பின்னரும், பிரிட்டிஷ் அரசாங்கம் முஸ்லிம்லீக்கைத் திருப்திப்படுத்த இனியும் நினைக்கமாட்டாது. முஸ்லிம் லீக்கின்றியே இந்திய சுதந்திர அரசியல் ஒன்றை நிர்மாணிப்பதற்கு அது வழிவகைகளை ஆலோசிக்குமென்று அமெரிக்கர்கருதுகின்றனர்.

# உலகம் பலவிதக் கதை

(முற்றொடர்—5)

### "நாமொன்றை நினைக்கத் தெய்வம் வேறொன்றை நினைத்தது"

மாமனாராகிய விநாயகமூர்த்தி மருமகளைப் பரிவுடன்பார்த்து, "மகளே, அன்றுதொட்டு இன்றுவரைக்கும் நானுக, என் மனைவியாக, உன்னை மருமகளென் றெண்ணி நடந்திலேம்; பெண்பிள்ளையைப் பெறும் பேறற்ற நாங்கள் உன்னை எங்கள் சொந்த மகள் போலவே மதித்து நடந்து வருகிறோம்; இதனை உங்கள் தாய் அறிவாள்; எங்களைவிட்டுப் பிரிந்துபோன உங்கள் தந்தையாரும் அறிவார்; எங்கள் மகனுக்கு உன்னைக் கல்யாணஞ் செய்துவைக்க வேண்டுமென்ற நோக்கமும் நேற்றின்று உண்டானதல்ல; உங்கள் சிறுபிராயந்தொட்டே அப்படியே எண்ணி வருகிறோம்: ஆனால், "ஒன்றை நினைக்க அது ஒழிந்திட்டொன்றாகும்" என்றவிதமாக, நாம்நினைத்த தொன்று, தெய்வம் நினைத்தது வேறொன்றாய் நேர்ந்ததோவென எண்ணிக் கவலைப்படவேண்டி யிருக்கின்றது; என் அருமைமகன் மீண்டு எங்களிடம் வருவானென்ற நம்பிக்கை, நாட்போகப் போகத் தேய்ந்து வருகிறதடியம்மா, (இப்படிச் சொல்லும்போது அவர் கண்களில் நீர் ததும்புகின்றது); என் அருமை மகளே; சொல்லுகிறேனென்று கவலைப்படாதே, உங்களிருவீர் மூலமாகவும் எங்கள் சந்ததியை விளங்கச் செய்யலாமென நம்பியிருந்த நாங்கள், இப்பொழுது அந்த நம்பிக்கை யெல்லாவற்றையும் அறவே விட்டு, உன் மூலமாயினும் எங்கள் பிற்சந்ததி விருத்தியாகச் செய்யலாமென யோசிக்கலா[illegible] மீண்டுவரா[illegible] எங்களிடமிருப்ப மகளே, உன்னை ஒரு முற்றமில்லாமல் நீடித்தகாலம் கன்னிகையாகக் காக்கவைப்பது முறையல்ல என்பது தான் எங்கவலை; இதனாற்றான், அன்று உங்கள் தாய் எங்கள் வீட்டிற்கு வந்தபோது உன் விவாகத்திற்காகிய முயற்சிகளைச் செய்யவேண்டுமென்று சொன்னேன்; இப்படி நான் சொன்னதை விபரீதமாக நினைத்துவிடாதேயடியம்மா; தந்தையில்லாப் பிள்ளையாகிய உன்னை நீடித்தகாலம் குமராக்க வைத்தால், உலகம் எங்களைத்தான் குற்றஞ் சொல்லும்: இனி, உன் இஷ்டம் எதுவோ அதன்படி நாங்கள் நடந்துகொள்ளச் சித்தமாயிருக்கிறேனடியம்மா" என்று கவலையோடு சொல்லிமுடித்தார்.

### "தெய்வம் எவ்வகையான பிழையுந்நேர விடமாட்டாது"

மாமனார் கூறியவை யனைத்தையும் மனமுருக அவதானமாகக் கேட்டுக்கொண்டிருந்தமருமகள் சிறிதுநேரம் யாதும் பேசாதவளாய் நின்று பின்னர் அவரைப் பணிவுடன் பார்த்து, "மாமா, எப்படி நீங்கள் என்னை உங்கள் பெற்ற பிள்ளைபோற் பாவித்து நடத்தி வருகிறீர்களோ, அப்படியே நானும் அன்று தொடக்கம் இன்றுவரையில் உங்களை என் உற்ற பிதாப்போல் மதித்து நம்பி நடந்து வருகிறேன்; நீங்கள் உங்கள் மகனுருக்கு ஏதும் ஆபத்து நேர்ந்திருக்கு மென்றெண்ணி ஒருபோதஞ் சஞ்சலப்படாதீர்கள்; நாங்கள் வகையெடுத்து வழிபடும் தெய்வம் அவருக்கு எவ்வகையானபிழையும் நேரவிடமாட்டாதென்பது என் நம்பிக்கை; அவரைப்பற்றி விசாரித்தறிதற்கு ஏதும் முயற்சி செய்யாதிருக்கிறீர்களே யென்பதை யிட்டுத்தான் எனக்குக் கவலை; இந்த

(தொடர்ச்சி 5ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் ரேடியோ

## அதன் எதிர்காலம்

( ஸ்ரீ க. கனகரத்தினம் )

இலங்கையின் ஒரேயோரு ரேடியோ நிலையமாகக் கொழும்பில் உள்ள ஸ்தாபனத்திலிருந்து வெளிவரும் நிகழ்ச்சிகள் சாரமற்றவை என்ற முறைப்பாட்டுக்கிணங்க. அரசாங்கம், இந்நிலையத்தைப் புநருத்தாரணம் செய்ய முன்வந்திருக்கிறது. தமிழ் நிகழ்ச்சிகள் விஷயமாக, ஓர் ஆலோசனைச் சபையையும் நியமித்திருக்கிறது. இச்சபைக்கு கணக்குப் பரிசோதனை அதிகாரியாயிருந்த ஸ்ரீ க. கனகரத்தினம் அவர்கள் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். ரேடியோத் தமிழ் நிகழ்ச்சிகளை எவ்வாறு, ரசிகர்களுக்கேற்ற முறையில் அமைக்கலாம என்பதுபற்றி ஸ்ரீ கனகரத்தினம தாம் செய்யும் முயற்சிகளை இந்த ரேடியோப் பேச்சின்மூலம் விளக்குகிறார்.

நமது கொழும்பு ரேடியோநிலையத்தின் தமிழ் நிகழ்ச்சிகளுக்கு ஒரு புதிய சகாப்தம் பிறந்திருக்கிறதென்ற நல்ல செய்தியில் நேயர்கள் யாவரும் மகிழ்ச்சி அடைவார்கள் என்று நம்புகிறேன். இந்த நிலையம் ஒலிபரப்ப ஆரம்பித்து ஏறக்குறைய 20 வருஷ காலமாகிவிட்டபோதிலும் இப்போது ஏற்பட்டிருக்கும் சில நிர்வாக மாறுதல் போன்றவை முன்னொருபோதும் ஏற்பட்டதில்லை. எங்குமே ஜனநாயகக் கொள்கை பரவி வரும்போது ரேடியோவிலும் ஜனநாயக ரீதியில் நிகழ்ச்சி நிர்வாகம் ஸ்தாபிக்கப்படுவது எல்லோர்க்கும் திருப்தியும் மகிழ்ச்சியும் தரும். இத்தனை காலமும் நிலைய அதிகாரியால் தயாரிக்கப்பட்டு வந்த நிகழ்ச்சிகள் யாவும் இப்போது ரேடியோ நேயர்களின் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால், அந்நேயர்களின் தேவைகளையும் சுவைகளையும் உணர்ந்து தயாரிக்கப்படுகின்றன என்ற புதிய செய்தியை நான் மகிழ்ச்சியுடன் தெரிவிக்க விரும்புகிறேன். தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்றுபாஷைகளிலும் நிகழ்ச்சிகள் தயாரிப்பதற்கு இப்போது தனித்தனி மூன்று நிர்வாகசபைகள் நியமிக்கப்பட்டிருக்கின்றன. இச்சபையினர் ரேடியோ நிர்வாகத்துக்குப் புறத்தேயுள்ள பொதுஜனங்களிலிருந்து ரேடியோ நேயர்களின் நலன்களைக் கவனிக்கவும், அவர்களின் தேவைகளைப் பூர்த்தி சய்யவும் நியமிக்கப்பட்டிருக்கின்றனர் அத்தகைய சபைகளில் ஒன்றாகிய தமிழ் நிகழ்ச்சி நிர்வாக சபையின் தலைவர் என்ற முறையில், ரேடியோ நேயர்களாகிய உங்களின் பிரதிநிதியாக, இப்போது சில வார்த்தைகள் பேசுவதற்கு நான் முன்வந்திருக்கிறேன்.

### அசட்சியமல்ல

இருபதுவருட காலமென்றால் சாதாரணமல்ல. அது ஒரு தலைமுறை. அப்படியிருக்க, நமது ரேடியோவின் தமிழ் நிகழ்ச்சிகளில் என்ன முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று ரேடியோ நேயர்களாகிய நீங்கள் கேட்கலாம். கேட்க உங்களுக்குப் பூரண உரிமையுண்டு. இதே கேள்வியை, இற்றைக்கு ஆறு வருஷங்களுக்கு முன்னர், இரண்டாவது மகா யுத்தம் ஆரம்பித்தசிலகாலத்திலேயே, நேயர்கள் கேட்டார்கள். தமிழ் நிகழ்ச்சிகள் மாத்திரமல்ல, ஆங்கிலம். சிங்கள நிகழ்ச்சிகளும் முன்னேறவில்லை என்று பொதுஜனங்கள் முறையிட்டனர். அதனை அரசாங்கம் அலக்ஷியம் செய்யாது, காரணமில்லாமல் பொதுஜனங்கள் முறையிடமாட்டார்கள் என்பதை யுணர்ந்து, அந்தக்காரணங்கள்தான் என்ன என்பதை ஆராய முற்பட்டது. அதன் பேருக ஒலிபரப்பு விசாரணைக் கமிஷனராக ஸ்ரீமான் கே. வைத்தியநாதன் அவர்கள் நியமிக்கப்பட்டு, அவர் சகல விஷயங்களையும் பரிசீலனை செய்து, தமது முடிவான அபிப்பிராயத்தைத் தெரிவித்து, ஓர் அறிக்கை சமர்ப்பித்தார். இந்த அறிக்கை கடந்த 1941-ம் ஆண்டு அரசாங்கத்தால் வெளியிடப்பட்டு உங்களில் பலர் படித்திருக்கலாம்.

### இப்போது ஏற்பட்டிருக்கும் சந்தர்ப்பம்

ஆனல், பொல்லாக்காலமாக ஐரோப்பாவில் மூண்ட யுத்தம் அரக்கழக்கையும் பிடித்து, நம் சின்னஞ்சிறு தீவாகிய இலங்கையையும் பற்றக் கொண்டது. இக் காரணத்தால் நமது வாழ்க்கை பாதிக்கப்பட்டதுபோல, அரசாங்கத்தின் திட்டங்களும் அமைப்புக்களும், பாதிக்கப்பட்டன. ரேடியோ நிகழ்ச்சிகளைச் சீர்படுத்தி, முன்னேற்றமான ஸ்தானத்தில் வைப்பதற்கு ஸ்ரீ வைத்தியநாதன் அவர்கள் கூறிய ஆலோசனைகளையும் பூர்த்தி செய்ய அரசாங்கத்தால் முடியவில்லை. ரேடியோ ஒலிபரப்பு நேரத்தில் பெரும்பான்மையும் யுத்தகால அவசிய காரியங்களுக்கும் யுத்த சேவையிலீடுபட்டிருந்த போர்வீரரின் ஆறுதலுக்குமாக உபயோகப்படவேண்டி நேரிட்டது. அத்துடன், ஒலிபரப்புக்கு வேண்டிய கருவிகளையும் தளபாடங்களையும் புதுப்பித்துச் சீர்படுத்தவும் வசதி கிடைக்கவில்லை. புறநாடுகளிலிருந்து யந்திரங்களும் அவற்றுக்குரிய சாமான்களும் வரமுடியாது தடைப்படவே கையிலுள்ளதைக் கொண்டு நாம் சமாளிக்க வேண்டியிருந்தது. அதனல், அரசாங்கம், ரேடியோ நேயர்களுக்குச் செய்யவேண்டியகடமையை உணர்ந்திருந்தும், சக்தியற்றிருந்தது. ஆனல் தெய்வச் செயலாக யுத்தம் முடிந்து, பழையபடி சமாதானகாலம் உதயம் செயதுவிட்டதால், இனிமேல் நேயர்களின் முறையீடுகளைக் கேட்டு அரசாங்கம் தனது கடமையை நியாயமான முறையில் செய்வதற்கு சந்தர்ப்பம் வந்திருக்கிறது.

### ஒரே கருவியினுல் உள்ள கஷ்டம்

கொழும்பு ரேடியோ தமிழ் நிகழ்ச்சிநிர்வாகசபை நான்மேற்சொன்ன ஸ்ரீவைத்தியநாதன் அவர்கள் சிபார்சுகளின் பலனுகவே ஏற்பட்டது. தமிழ் நிகழ்ச்சிகளுக்குரிய நேரத்தில் பொருத்தமான நிகழ்ச்சிகளைத் தயாரிக்கவும், சங்கீதம், சொற்பொழிவு, நாடகம் முதலிய நிகழ்ச்சிகளுக்கு திறமையுள்ளவர்களைத் தெரிந்தெடுக்கவும், பொதுவாக ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சிகளில் நிலைய அதிகாரிக்கு ஆலோசனை கூறவும், ரேடியோ நேயர்களின்முறையீடுகளை அவ்வப்போது கேட்டு ஆவன செய்யவும், பொதுஜனங்களின் பிரதிநிதிகளாக நாங்கள் இருக்கிறோம். அத்தகைய பிரதிநிதி என்ற முறையில்தான், இன்று நான் உங்களில் ஒருவனுயிருந்து, ரேடியோ நிகழ்ச்சிகளில் இப்போது என்ன சீர்திருத்தங்கள் செய்யப்படுகின்றன என்பதை எடுத்துக்கூற முன்வந்திருக்கிறேன்,

மற்றைய நிலையங்களில் காணப்படாத ஒரு பெரிய கஷ்டம் நமது கொழும்பு நிலையத்தில் உண்டு [illegible] றது. அதாவது இருப[illegible] ரேடியோ Transmitter என்ற ஒலிபரப்பும் கருவி. இதை வைத்துக்கொண்டு தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று பாஷைகளிலும் நாளொன்றுக்கு 10 மணி நேரம் ஒலிபரப்ப வேண்டியிருக்கிறது. இந்த 10 மணி நேரமும், இலங்கையில் லைசென்ஸ் பெற்று ரேடியோ வைத்திருக்கும் நேயர்களையும் அவர்கள் சுவையை [illegible]தே பகிர்ந்து விடப்பட்டு [illegible]கள் தயாரிக்கப்படுகின்றன.

(வரும்)

# அடிகள் அமுதமொழி

"ஊனக்கண்ணைக் காட்டிலும் ஞானக்கண்ணே சிறந்தது"



மகாத்மாத்மா காந்தியவர்கள் கிழக்கு வங்காளப் பகுதியிற் சஞ்சாரஞ் செய்யும் போது சண்டிபுரி யென்னும் கிராமத்தில் வசிக்கும் அறுபப்படைந்த ஒரு குருட்டுக் கிழவி, தான் சாகமுந்தி அவரைத் தரிசிக்கவேண்டு மென்ற ஆசை கொண்டு, அவர் சண்டிபுரிக்கு வரும் சமயத்தை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தது; குறித்த கிராமத்தில் மகாத்மா வந்து சேர்ந்துவிட்டா ரென்பதைக் கேள்விப்பட்ட பிறகு மெல்ல மெல்ல மகாத்மா இருக்குங் கூடாரத்திற் போய், அவரையடைந்து "அப்பனே, உன் பெருமைகளையெல்லாம் கேள்விப்பட்டிருக்கிறேன்; நான் சாகமுந்தி உன்னைத்தரிசிக்க வேண்டுமென்பது என் அவா; ஆனல், என்னசெய்வேன், உன்னைத் தரிசிப்பதற்குக்கடவுள் எனக்குக்கண்ணைக்கொடுக்கவில்லை; ஆனதினுல் என் கையினுல் உன் மேனியை ஒரு முறை தொட்டுப் பார்க்க எனக்கு உத்தரவு தா'' என்று அவரை இரந்ததாம்; அப்பொழுது மகாத்மா "அம்மே, நீ விரும்பியபடி என்னைத் தீண்டிக்கொள்ளலாம்; அதற்குத் தடையில்லை; ஆனல். அம்மே, ஒன்று சொல்லுகிறேன் கேள்; ஊனக்கண் ணில்லையே யென்று கவலைப்படாதே; ஊனக் கண்ணுகிய உந்தப் புறக்கண் தன் பார்வையிலே பொய்யானவைகளை மெய்யென நினைக்கச் செய்து உயிருக்குப் பல தீமைகளைத் தேடிவிடும்; ஆனல், ஞானக்கண்ணுகிய அகக்கண்ணெனிலோ, இறைவனையறியும் ஞானம் முதலான பெரும் உறுதிகளை உயிருக்கு ஈட்டிவைக்கும்'' என்று சமாதானம் சொல்லி, தம்மேனியைப் பரிசனங்கொடுத்துமகிழ்ச்சியோடு அந்த மூதாட்டியை அனுப்பினராம்.

# வெருட்டிஞராம்!

## பிரிட்டிஷ் பிரதம மந்திரி செய்த வேலை

பர்மா விஷயமாக சேனுதிபதி ஆங்ஸேனுககும், பிரிட்டிஷ் பிரதமர் அட்லிக்குமிடையில் நிகழ்ந்த ஒப்பந்தம் பற்றிப் பல ருசிகரமான தகவல்கள் இப்போது கிடைத்திருக்கின்றன. பர்மாவுக்கு ஒரு ஆண்டுக்குள் பூரண சுதந்திரம் வாங்கப் புறப்பட்ட ஆங்ஸேன், பிரிட்டிஷாரின் ஏமாற்று வித்தையில் மயங்கி பூனைபோல மீண்டதன் காரணம் என்ன என்பதை அவருடன் சென்ற பிரதிநிதிகளில் ஒருவரும், இப்போது இந்த உடன்படிக்கையைக் கண்டிக்கும் முகத்தால் பர்மா இடைக்கால அரசாங்கத்திலிருந்து விலகி, ஆங்ஸேனுக்கு விரோதமாக ஓர் புதுக் கட்சியைத் தாபித்து வருபவருமான யூஸா இப்போது வெளியிடுகிறார் யூஸா தெரிவிப்பதாவது:

'பிரிட்டிஷ் அரசாங்கம் தயாரித்துள்ள உடன்படிக்கையிற் பர்மியப் பிரதிநிதிகள் கையொப்பம் வைக்கவேண்டும் என்று பிரிட்டிஷ் பிரதமர் மிகவும் அவசரப்பட்டார். சென்ற ஜனவரிமாதம் 20-ம் திகதி பிரிட்டிஷ் பிரதமர் ஓர் கடுதாசியில் ஏதோ வரைந்துகொண்டுவந்து எம்மிடம் கையொப்பம் கேட்டார். எங்களுக்கு இது ஓர் பெரிய வியப்பாக இருந்தது. நாங்கள் ஒன்றும் பேச முடியவில்லை. பல நிமிஷ நேரமாக அறையில் நிசப்தமாக இருந்தது. சிலமணிநேரம் சென்றதும், ஆங்ஸேன் அட்லியை நோக்கி நடுநடுங்கிய குரலில், "இதற்கு நான் ஒப்பம் இடமுடியாது; மன்னிக்கவும்'' என்றார். மிஸ்ரர் அட்லிக்குக் கோபம் வந்துவிட்டது. மேசையைத் தன்கையில் இருந்த பென்சிலால் தட்டி, "இங்கே பாரும், நீர் எதற்காக இங்கே இவ்வளவு தூரம் வந்தீர்; ஓர் உடன்படிக்கைக்கு வர விருப்பமில்லாவிட்டால், இவ்வளவு காலமாயும் இங்கே ஏன் எம் நேரத்தையும் உம் நேரத்தையும் செலவழித்தீர்'' என்று கோபத்துடன் உரத்த சத்தமிட்டுக் கேட்டார்.

அடுத்தநாள், மீண்டும் சந்தித்தோம். பிரிட்டிஷ்பிரதமர் ஆங்ஸேனை நோக்கி, "இப்போது என்ன சொல்லுகிறீர்?'' என்று கேட்டார். "நான் கையொப்பம் வைக்கிறேன்'' என்றார் ஆங்ஸேன் சேனுதிபதி.

# அரிசி வந்தது

## ஆனல் 1½ படி கிடைக்காது

பர்மாவிலிருந்து 6 000 தொன் அரிசி 'ஜலமணி'' என்னும் கப்பலிலிருந்து சென்ற புதன்கிழமை கொழும்புத் துறைமுகத்தில் இறக்குமதியானது. இன்னும் 4 500 தொன் அரிசி சில தினங்களில் எதிர்பார்க்கப்படுகிறது.

'ஜலமணி'' கொண்டுவந்த 6,000 தொன் அரிசியும் வந்திருக்காவிட்டால், அரிசி நிலை மோசமாய் வந்திருக்கக்கூடும். அது வந்தமையினுல் ஒருபடி அரிசி என்ற அளவுதானும் குறைக்கப்படுமோ என்ற பயம் இப்போதைக்கு வேண்டியதில்லை என்று ஓர் அதிகாரி கூறுகிறார்

கிழமைக்கு ஒருபடி விகிதத்தில், இலங்கைக்குத் தினந்தோறும் 750 தொன் அரிசி வேண்டுமாம்.

## கீரிமலைச் சிவன்கோவில்

### மகாசிவராத்திரி விழா

கீரிமலைப் புண்ணிய க்ஷேத்திரத்திலே எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ நகுலாம்பிகா சமேத நகுலேசுவரப் பெருமானுக்கு விய ஸூ மாசி மீ எ உ புதன்கிழமை (19-2-47) இரவு சிவராத்திரி புராணப் படிப்பும், மகாஅபிஷேகமும், பஞ்சமுக அர்ச்சனையும், பஞ்ச மூர்த்திகள் வீதி விழாவும் நடைபெறும் என்று அறிகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரிய திட்டம்

## வர்த்தகப்பகுதியின் ஆலோசனை

இலங்கையிலே கொப்பரா தேங்காயெண்ணெ ரப்பர் ஆகியவைகளிலிருந்து இரசாயன முறைப்படி பல உப பொருள்களையும் தயாரிப்பதற்கு வகுக்கப்பட்ட பெரிய திட்டங்கள் பலவற்றை தொழில் வர்த்தகப் பகுதி அங்கீகரித்துள்ளதாகத் தெரிகிறது. இலங்கையில் காஸ்டிக்சோடா-குளோரைன்' தொழிற்சாலையொன்றையும் நிறுவுவதற்கு ஆலோசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்களை அமுலுக்குக் கொண்டுவருவதற்குப் பல வேலைகளையும்செய்வதற்கு ஆலோசிக்கப்பட்டு வருகிறது. இவற்றிற்குரிய இயந்திர சாதனங்களை இறக்குமதி செய்யவும் கட்டிடங்கள் அமைக்கவும் ரூபா 100,000 வரை அரசாங்க சபையில் உபமான்யம் கோரப்படுமாம்.

இதுவரை இலங்கையில் இருந்து வெளிநாடுகளுக்கு 50,000 முதல் 70,000 டன்கள்வரை கொப்பரா ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது, இனிமேல் இக்கொப்பராவை இலங்கையிலேயே உப பொருள்களைத் தயாரிக்க பாவித்துக்கொள்ளலாமென்று கூறப்படுகிறது. இலங்கையிலே நவீன முறைகளைக் கையாண்டு இவ்வுப பொருள்களைத் தயாரிக்க முற்படுவதால் வேலையில்லாத் திண்டாட்டத்தையும்தவிர்க்கலாமென்றும் தொழில் வர்த்தக அதிகாரி தெரிவிக்கின்றார்,

ரப்பர் சம்பந்தப்பட்ட வரையில் ஸோல்கிரீப் ரப்பர், ரப்பர் பால் ஆகியவை தயாரிப்பதற்கான இயந்திரங்களை இறக்குமதி செய்வதற்கு ஆரம்பத்தில் ரூ 550,000வரை செலவாகுமென்றும், இப்பொழுது சுத்தம்செய்த ரப்பரை ஏற்றுமதி செய்தே தகுந்த "மார்க்கட்டு"களைக் கைப்பற்றி இப்பொழுதுள்ள போட்டிகளைச் சமாளிக்க முடியுமென்று தொழில் வர்த்தக அதிகாரி கூறுகின்றார், சுத்தம் செய்யப்பட்ட ரப்பருக்கே உலக மார்க்கட்டுகளில் வருமானம்அதிகமாக இருக்கிறது.

காஸ்டிக் சோடா உற்பத்தி இயந்திரங்களுக்கும், கட்டிடங்களுக்கும் ஆரம்பத்தில்ரூ 5,000,000வரை தேவைப்படும். இம் மூலப்பொருள்களைக்கொண்டு ஏராளமான உப பொருள்கள் தயாரிக்கப்படுவதால் இம் மூலப்பொருள்களை இலங்கையிலேயே உற்பத்தி செய்யவேண்டியது அவசியமென்றும், வருடமொன்றுக்கு 15,000 டன் காஸ்டிக் சோடாவும், 1300 டன் குளோரையினும், 1300 கனஅடி ஜலவாயுவும் உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலையொன்றை அமைக்கத் திட்டம் போட்டுள்ளதாகவும் வர்த்தகப்பகுதி அதிகாரி கூறுகின்றார்.

## இலங்கையர்க்குத்தான்

## இலவசக் கல்வித்திட்ட நன்மை

இலங்கையிலே இலவசக்கல்வித்திட்டம் அனுட்டானத்துக்கு வந்தபின்னர், இந்தியா முதலிய இடங்களிலிருந்து கல்வி கற்பதற்குப் பல மாணவர் வருகின்றனர் என்று சொல்லப்பட்டு வந்தது இதனைத் தடுப்பதற்குக் கல்வி மந்திரி திட்டம் வகுத்திருக்கிறார்.

இலங்கையருடைய, அல்லது இலங்கையில் வசிக்கும் அந்நியருடைய பிள்ளைகளுக்குத்தான் இலவசக் கல்வியூட்டும் வித்தியாசாலைகளில் இடங்கொடுக்க வேண்டுமென்று வித்தியாகர்த்தர் ஓர் சுற்று நிருபம் இப்போது விடுத்திருக்கிறார்,

## குழப்பம் நேருமா?

### அடுத்த தேர்தலில் அரசினர் ஏற்பாடு

இன்னும் சிலகாலத்தில் பாராளுமன்றத் தேர்தல் நடக்கவிருக்கிறது. அப்போது பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த அபேட்சகர்கள் தங்கள் பிரசாரக்கூட்டங்களை நடாத்தும்போது எதிர்க்கட்சியாளர் அவற்றைக் குழப்ப எத்தனிப்பார்கள். அதன் பயனுகக் கலவரங்கள் நிகழலாம். இன்னும் தேர்தற்காலம் நெருங்க நெருங்க ஊரவர்களுக் கிடையே பரஸ்பர அபிப்பிராயபேதம் ஏற்பட்டு கிளர்ச்சியுண்டாக்கி அதன் பயனுகப் பலவிதமான அனர்த்தங்கள் நிகழலாம். இவற்றையெல்லாம் சமாளித்து, ஊரில் அமைதியை நிலைநாட்டுதற்கு ஏற்ற நடைவடிக்கைகளை எடுக்க உள்நாட்டுமந்திரசபை ஆலோசித்து வருவதாகத் தெரிகிறது,

பகிரங்கக் கூட்டங்களில் குழப்பங்கள் நேர்வதை எவ்வாறு தடுக்கலாம் என்பதைப் பொலிஸ்பகுதி அதிகாரி மிஸ்ரர் அலுவிகாரையுடன் உள்நாட்டு நிருவாகசபையினர் சென்ற வாரம் விவாதித்ததாகத் தெரிகிறது.

தேர்தற்பிரசாரக் கூட்டங்களில் ஒலிபரப்புக் கருவிகளை உபயோகிப்பதைத் தடுக்க உள்நாட்டு நிருவாக சபையினர் ஆலோசித்து வருகின்றனர். இன்னும் ஊர்வலங்கள் எடுத்துச் செல்லும் விஷயமாகவும் பலவித மான கட்டுப்பாடுகள் விதிக்கப்படலாம்.

அடுத்துவரும் பாராளுமன்றத் தேர்தற் பிரசாரம் மக்களுக்கு மனக்கிளர்ச்சியை உண்டுபண்ணி அவர்களைக் குழப்பத்தில் ஈடுபடுத்தக்கூடிய அளவுக்கு செய்யப்படும் என்று அதிகாரிகள் பூரணமாக நம்புகின்றனர்.

தேர்தற்காலத்துக்கிடையில் மேலதிகமாக இன்னும் 700 பொலிசாரைப் புதிதாக நியமிக்கப் பொலிஸ் அதிகாரி நிச்சயித்திருப்பதும் குறிப்பிடத்தக்கதாம்.

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

**ஞாயிறு பிப்ரவரி 16**

காலை 7-15 ஆரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 காளையார்கோயில் எம் எஸ் ஷண்முகசுந்தரம் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 நாகஸ்வர இசை 8.30 கோயம்புத்தூர் ஸி ராஜலட்சுமி பாட்டு 9 முடிவு.

12 ஆரம்பம் 12.30 நினைப்பும் நடப்பும் 12-40 தெல்லைக்காட்சி 12.45 அ ஜண்ட் கந்தி நாடகம் 12.55 திருக்கிறம் சம்பவம் 1 மணிமலர் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 என் எம் நடராஜபிள்ளை புல்லாங்குழல் 2 தமிழில் செய்திகள் 2-05 பெண்ணுலகம் 2.30 நீங்கள் கேட்டவை 3 முடிவு.

மாலை: 5 கோயம்புத்தூர்ஸி ராஜலக்ஷ்மீ பாட்டு 5.40 தேவாரங்களை 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6.15 கிராமநிகழ்ச்சிகள் 7 காரைக்குடி சங்கரி அம்மாள் வீணை 7.30 தமிழில் செய்திகள் 7-45 நரது தபால் பெட்டி 8 காளையார் கோயில் ஷண்முகசுந்தரம் பாட்டு 8-30 காரைக்குடி சங்கரி அம்மாள் வீணை 9 ஆங்கிலத்தில் செய்திகள்9-15 குரல்வகை 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9.45 ஸி வேணுகோபால் கிளாரினெட் 10 இசைவேளை 10-30 முடிவு,

**திங்கள் பிப்ரவரி 17**

காலை: 7-15ஆரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 எம ராமசாமிபிள்ளை நாகஸ்வரம் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 புதிய பாடல்கள் 8-30 காரைக்குடி எம் மணிராஜ் பாட்டு 9 முடிவு

1 ஆரம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 காரைக்குடி எம் மணிராஜ் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 காரைக்குடி எம் மணிராஜ் பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு.

மாலை: 5 எம ராமசாமி பிள்ளை நாகஸ்வரம் 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6.15 கிராமநிகழ்ச்சிகள் 7 சட்டியசகுடி ஆர் மீனட்சி சுந்தரம் பாட்டு 7-30 தமிழில் செய்திகள் 7-45 நாடக தேவைகள் 8 சாட்டியக்குடி ஆர் மீனட்சிசுந்தரம் பாட்டு 8-30 அசைக்கூதம்பம் 8 55 இசைவேளை 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 குரல்வகை 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9-45 வாலன் வியோலா 10 இசைவேளை 10-30 முடிவு.

**சனி பிப்ரவரி 18**

காலை 7-15 ஆரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7.30 எஸ் கோமளம் பாட்டு

## விளம்பரம்

நயினாதீவி லிருக்கும் கிராய்க் குளத்தின் வரம்புகளைப் பெலப்படுத்துவதற்கும் புற்கத்தை அடிப்பதற்கும் வடமாகாணப் பகுதி ஏஜண்டரவர்கள் 1947 ம் ஆண்டு மாசி மாதம் 25-ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 12 மணியளவில் குறித்த (டெண்டர்)விண்ணப்பப்பத்திரங்களைஏற்றுக்கொள்வார்.

விண்ணப்பப் பத்திரங்கள் 50 ரூபா கட்டி வடமாகாண ஏஜண்டரிடம் பெற்றுக்கொண்ட பத்திரங்களில் எழுதப்பட வேண்டும். மறு விபரங்களை அவரிடத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

G 140 14-2-47

## விளம்பரம்

சட்டுவான் பகுதியி லிருக்கும் கறண்டக் குளத்தின் வரம்புகளைப் பெலப்படுத்துதற்கும் புற்கத்தை அடிப்பதற்கும் வடமாகாணஏஜண்டரவர்கள் 1947-ம்ஆண்டு பங்குனி மாசம் 4-ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 12 மணி அளவில் குறித்த (டெண்டர்) விண்ணப்பப் பத்திரங்களை ஏற்றுக்கொள்வார்.

விண்ணப்பப் பத்திரங்கள் ரூபா 50 கட்டி வடமாகாண ஏஜண்டரிடம் பெற்றுக்கொண்ட பத்திரங்களில் எழுதப்பட வேண்டும். மறுவிபரங்களை அவரிடத்திற் பெற்றுக்கொள்ளலாம்,

G 142 14-2-47

## வங்காளத்தில் லீக் பிளவு

வங்காளத்து முஸ்லிம்லீக் கட்சிக்குட் பிளவு ஏற்பட்டிருப்பதாகத்தெரிகிறது. இந்த மாகாணத்திலே, முந்திப் பிரதம மந்திரியாகவிருந்த மிஸ்ரர் பஸ்லுல்ஹக் என்பவர் இப்போது மீண்டும் முஸ்லிம்லீக்கிற் சேர்ந்து பிரதம மந்திரிப் பதவியைக் கைப்பற்ற முயற்சி செய்கிறார். சிலதினங்களுக்குமுன் நிகழ்ந்த மாணவர் ஆர்ப்பாட்டத்தில் "ஷுஹ்ராவர்த்தி மந்திர சபை வேண்டாம; பஸ்லுல்ஹக்கே பிரதம மந்திரியாக வரவேண்டும்" என்று மாணவர்கள் கோஷம்புரிந்ததும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாம், இன்னும் சில தினங்களில் வங்கலீக்கர்க்கிடையே பெரும் பிளவு உண்டாவதை எதிர்பார்க்கலாம்,

உங்கள் வியாபாரம்
விருத்தியுற
வேண்டுமா?
*
அப்படியானல்
இந்துசாதனத்தில்
விளம்பரஞ் செய்யுங்கள்

# பகட்டுரைகள்!

## அரசாங்கத்தின் கருமங்கள்

"இன்று இலங்கையில் இரண்டே இரண்டு கட்சிகள்தான் இருக்கின்றன, ஒன்று அடக்கும் கட்சி; மற்றது அடக்கப்படும் கட்சி: ஒன்று ஏழைமக்கள் இரத்தத்தைக் குடித்து ஏப்பமிடும் செல்வர்கட்சி; மற்றது அல்லும் பகலும் உழைத்தும் நேரக் கஞ்சிக்கும் வழியில்லாது கங்காள உருவினராக நலியும் ஏழைகள்கட்சி: இந்த இரண்டு கட்சிகளையும் விட வேறு கட்சிகளுக்கு இந்த நாட்டில் இடமேயில்லை, முதற்கட்சிதான் ஐக்கியதேசியக்கட்சி! மற்றது சமசமாஜக்கட்சி'

என்று டக்ரர் என் எம் பெரீரா சென்றவாரம் வாதுவையில் நிகழ்ந்த ஓர் கூட்டத்திற் கூறினர். இப்போது ஐக்கியதேசியக் கட்சியினரைப் பெரும்பான்மையாகக் கொண்டுள்ள இப்போதைய அரசாங்கம் செய்துள்ள சில வேலைகளைக் கண்டித்து டக்ரர் பெரீரா பின்வருமாறு கூறினர்.

"சேர் ஒலிவர் குணத்திலகா தம் பேனாவின் ஓர் எழுத்திஞல், ஏற்கெனவே கொழுத்த சம்பளம் பெறும் அரசாங்க உத்தியோகத்தர் [illegible] னத்தை அதிகரித்தார். இ[illegible] யோகத்தரிற் பலர் இதனை எதிர்பார்க்கவேயில்லை. எனவே இருந்தாப்போலத் தமக்கு வேதன உயர்ச்சி கிடைத்துவிட்டதுபற்றி அவர்கள் பேராச்சரியம் அடைந்தார்கள்.

அரசாங்க உத்தியோகத்தர்க்கு இந்தச் சலாக்கியங்களைச் செய்த சேர் ஒலிவர் ஏழைத் தொழிலாளிகளுக்கென்ன செய்தார்? பல்லாண்டுகாலமாக இவர்கள் சம்பளம் போதாது, ஜீவிக்க வழியில்லை என்று கதறினர்கள், கடைசியில் ஓர் அற்ப அதிகரிப்பைச் சேர் ஒலிவர் ஏற்படுத்தினர், இதுதான் ஐக்கிய தேசியக்கட்சியின் பரந்த மனப்பான்மை!

"இன்று செனனுயக்காக் கட்சி ஏதோ பல கருமங்கள் சாதிப்பதாகக் கூறுகிறது. இவையெல்லாம் புலுடா? அவர்களுடைய கருமங்கள் யாவும் கடுதாசியில்தான் கிடக்கும் வெளியில் வரப்போவதில்லை. அவை எல்லாம் வீண் பகட்டு"

## சிறையிலிருந்தபெண்தப்பினுள்

கொட்டாஞ்சேனையில் வசித்த சோமி பெரீரா என்னும் 23 வயதுடைய சிங்களப்பெண் நியாய ஸ்தலத்தில் தண்டனை பெற்று வெளிக்கடைச் சிறையில் வைக்கப்பட்டிருந்தாள். இரண்டொரு தினங்களுக்குமுன், அவள் அந்தச்சிறைக்கூடத்தில் 16 அடி உயரமுள்ள சுவர்மீது ஏறி, [illegible] ஓடிவிட்டாள் [illegible] அவளை இன்னும் கண்டுபிடிக்கவில்லை,

8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 செம்மங்குடி வைத்தியநாதராகவர் இசைத்தட்டு 8.30 வேதாரண்யம் எம் கனகாம்புஜம் புல்லாங்குழல் 9 முடிவு

1 ஆரம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 வேதாரண்யம் கனகாம்புஜம் புல்லாங்குழல் 2 தமிழில் செய்திகள் 2.05 வேதாரண்யம் எம் கனகாம்புஜம் புல்லாங்குழல் 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு.

மாலை 5: எஸ் கோமளம் ஸ்ரீநிவாஸ் பாட்டு 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 தாளவாத்யக்கச்சேரி 7-15 அருந்ததியும் ஹரிச்சந்திரனும் 7-30 தமிழில் செய்திகள் 7-45 கே எஸ் வெங்கடராமையர் பாட்டு 9 ஆங்கிலத்தில செய்திகள் 9-15 எஸ் ஜி கிட்டப்பா 9-30 லண்டனிலிருந்து செய்திகள 9-40 அறிவிப்புகள் வானிலை 9.45 அருட்பா 10-30 முடிவு,

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உலகம்பலவிதக் கதை

2ம் பக்கத் தொடர்ச்சி

ஊரில் இருந்தபடியே நீங்கள் அவரைப் பற்றி விசாரணை செய்துகொண்டிருப்பதனால் ஏதும் உண்மையை அறியலாமோ என்பதும் எனக்குப் புலப்படவில்லை; எங்கள் அண்ணரும் அந்த ஊரிலேயிருப்பதனால், நீங்கள் சிரமத்தைப் பாராமல் இங்கிருந்து புறப்பட்டுப் போய் அங்கே பலவழியாலும் அவரைப்பற்றி விசாரித்தறிய முயற்சி செய்தால், அதனால்நன்மையுண்டாகுமென்று நினைக்கிறேன்; உங்களுக்கு நான் இவைகளைச் சொல்லத் துணிந்ததையிட்டுக் குறையெண்ணுதீர்கள்; என் கல்யாண விஷயமாக நீங்களாக, என் தாயாராக, அண்ணராக ஏதும் முயற்சி செய்வதனால் நன்மையில்லையென்பதை நம்புங்கள்: எல்லாமறிந்த உங்களுக்கு நான் அதிகஞ் சொல்வதும் என்மேல் தவறாகும்'' என்று கண்களில் நீர் சிந்தக் கவலையோடு சொன்னாள்; இவற்றை யெல்லாங் கேட்டுக்கொண்டிருந்த விநாயகமூர்த்தி பெரிதுஞ் சஞ்சலப்பட்டார்; சற்றுநேரம் ஏதும் பேசாது சிந்தித்த வண்ணமிருந்தார்; இப்படியிருக்கும் போது கண்ணகியம்மையும் அங்கே வந்து மாமனும மருமகளும் கவலையோடு கூடியவர்களாய் முறையே இருப்பதையும் நிற்பதையுங் கண்டாள் அப்போது மாமனார் மருமகளைப் பார்த்து, ''நீ ஒன்றுக்குங் கவலைப்படவேண்டாம அம்மா; நான் என் பிள்ளையைப்பற்றி அறிதற்காக வேண்டிய முயற்சிகளை இன்று தொடக்கஞ் செய்கிறேன்'' என்று மருமகளுக்குத் தேறுதல் சொல்லித் தாமும் ஒருவாறு தேறிக்கொண்டு அந்த அறையை விட்டுத் தம் தங்கையுடன் தலைவாசற்பக்கத்தை யடைந்து தம் மருமகளின் மனநிலையையும் விசேஷமான குணங்களையும் அவளுடைய தாயாருக்குச்சொல்லிக் கவலைப்பட்டு, அக்கண்ணகியம்மையிடம் அநுமதி பெற்றுக்கொண்டு தம் வீட்டிற்கு மீண்டார்;

### தமயனுக்குக் கடிதம்

சிவபாக்கியம்தன் மாமனார்தேற்ற, ஒருவாறு அப்போதைக்குத் தேறினளேனும், பின்னர்ச் சிந்தனையோடு கூடியவளானாள்: சிறிதுநேரம் அவள் யோசித்துத் தன் உள்ளத்தில் ஏதோ நிச்சயஞ் செய்துகொண்டு தன் தமயனுக்குக் கடிதமெழுதும்படி, அதற்காகிய உபகரணங்களை யெடுத்துப் பின்வருமாறு எழுதுவாளாயினாள்:-

உ

''கருணையங்கடலாகிய பரமேசுவரியின் கிருபையால் வாழும் என் அருமையான அண்ணாவுக்கு அன்போடும் பணிவோடும் எழுதிக்கொள்வது, எங்கள் அருமைத்தாயார், அன்பான மாமனார் மாமியார் மற்றைச் சுற்றத்தாரும் நானும் ஆண்டவனருளாற்சுகமேயிருக்கிறோம்; சகல ஆன்மகோடிகளையும் பாதுகாத்தருளும்ஆண்டவன் உங்களையும் பாதுகாப்பார்; என் அருமையான அண்ணா, எனக்கு நீங்கள் தமயனாராக இருப்பதோடு, எங்கள் தகப்பனார் இறந்த பின்னர் எனக்குத் தகப்பனாராகவும் இருந்து என்னை அன்போடு பேணி வருகிறீர்கள் எனக்கு ஏதுங் குறைகளிருந்தால், அக்குறைகளை முதற் கடவுளுக்கு, இரண்டாவது உங்களுக்கன்றி வேறு நான் ஆருக்கு முறையிடுவது; ஈசுவரியின் அருளாலும் நீங்கள் என்மேல் வைத்துள்ள சகோதரபாசத்தினாலும் எனக்கு எவ்வகையான குறையுமில்லை யெனலாம்; ஆனால், என் அருமையான அண்ணாவிடம் நான் வேண்டிக்கொள்வது: நீங்கள் எங்களைப் பிரிந்து இந்த ஊரைவிட்டுப்போய் எட்டோன்பது வருடங்கள் வரையிலாயின; சென்றமாசம் நீங்கள் எழுதிய அன்பான கடிதத்திலும், இப்போதைக்கு நீங்கள் ஊருக்கு வருதல் முடியாதென்று கவலையோடு எழுதியிருந்தீர்கள்; நான் மாத்திரமல்ல, எங்கள் தகப்பனாரின் பிரிவை யெண்ணி நீடித்தகாலமாகக் கவலைப்படும் எங்கள் அன்பான தாயார், நீங்களும் இப்போதைக்கு இந்தவூருக்கு வரமுடியாதென எழுதிய செய்தியையிட்டுப் பெரிதும் கவலைப்படுகின்றார்; என் அருமையான அண்ணா, இப்போழுது உந்த வூரிலிருந்து இஙகும், இந்தவூரிலிருந்து உங்கும் யாழ்ப்பாணத்தவர்கள் வசதியாகப் பிரயாணம்பண்ணுகிறார்களென அறிகிறோம்; எங்கள் அயலில் இருப்பவர் சிலரும் குடும்ப சகிதமாய், அடுத்த மாசம் வரையில் உவ்விடம் வர உத்தேசித்திருக்கிறார்கள்; ஆனதால், எங்கள் அரிய மாமா மாமியென்னு மிவர்களுடைய அநுமதியும் பெற்றுக்கொண்டு உங்கள் பூரண சம்மதத்தோடும் தக்க துணையோடும் எங்கள் தாயாரும் நானும் உவ்விடம் வந்து உங்களுடன் சிலகாலம் தங்கியிருந்து மீளலாகுமோ என ஆசைப்படுகிறேன, அண்ணா; நான் சிறுமியாதலால், என்னுடைய நோக்கத்தில் ஏதும் தவறிருந்தால், என்னைக் கோபியாது, வெறுக்காது, பிழையைப் பொறுத்துக்கொண்டு அன்பான பதில் எழுதக் கேட்டுக் கொள்ளுகிறேன் என அரிய அண்ணா; நான் இப்பொழுது கொண்டுள்ள இந்த நோக்கத்தை எங்கள் அருமையான தாயாருக்குத் தானும் இன்னமும்வெளியிடவில்லை; உங்களைநினைத்து மீட்டும் நமஸ்காரஞ் செய்து இக்கடிதத்தை முடிக்கிறேன்

இங்ஙனம்,
உங்கள் கட்டளைப்படி நடக்கும்
விசுவாசமான தங்கை
சி. சிவபாக்கியர்.

சிவபாக்கியம் தான் எழுதிய கடிதத்தைக் கடிதத்தானத்திற் கொண்டு போய்ப் போடும்படி தங்கள் வீட்டு வேலைக்காரச் சிறுவனிடங் கொடுத்தனுப்பிவிட்டிருந்தாள்; இவள் விடயம் இவ்வளவிலிருக்க, இவர்களுடைய வீட்டிற்கு ஒரு கூப்பிடுதூரத்தில் விஜயரத்தினமென் றொருவன் பலவருட காலமாக மலாய்நாட்டில் உத்தியோகம் பார்த்துப் பொருளீட்டியவன், ஒரு சிறந்த மேல்வீடுகட்டிக் கொண்டு அதிற்றானே வசிப்பானுமினான்; இவனுடைய மனைவி விவாகஞ்செய்து சிலவருடஞ் செல்வதற்கிடையில், மலாய்நாட்டி லிருக்கும் போதே, முதற்பிள்ளையைப் பிரசவித்த காலத்தில், பிள்ளை செத்துப் பிறக்க, அவளும் மாண்டாள்; விஜயரத்தினம் ஒன்றியாக மலாய்நாட்டில் யுத்தகாலத்திலும் ஒருவாறு தப்பியிருந்து யுத்தம் முடிந்து சமாதானமுண்டானவுடனே, தன் சொந்த வூரை வந்தடைந்தான்; இங்கு வந்த போது அவனிடத்தில் அதிக பணமில்லையாயினும், முந்திச் சம்பாதித்த பணத்தைக் கொண்டு நிலம்புலம் ஈடுபிடித்துப் பொருளீட்டி யுள்ளவன்; தன் பணத்தை விருத்தியாக்கும்படி தனக்குப் பெண் கொடுத்த மாமன் வசமே கொடுத்திருந்தான்; மாமனும் விசுவாசத்துடன் அவனுடைய பொருளை வட்டிக்குக் கொடுத்து ஈட்டி வந்தான்: விஜயரத்தினத்தின் வயசு முப்பத்தாறு முப்பத்தேழு வரையிலிருக்கும்; புநர்விவாகஞ்செய்து கொண்டு மீண்டும் மலாய்நாட்டிற்போய் உத்தியோகம் பார்க்க வேண்டுமென்பதே இவன் கொண்டுள்ள நோக்கம்: இவனுக, இவனுடைய மாமனுக விவாகமுயற்சி செய்யாமலிருக்க, சிறந்த சீதனத்தோடும் இக்காலத்துக் கல்வி நாகரிகத்தோடுங்கூடிய கன்னியர்களைக்கல்யாணத் தரகர் பலர் இந்த விஜயரத்தினத்திற்கு மணம்பேசி வருவாராயினர்; விஜயரத்தினம், அதிக சீதனத்தை விரும்பிலன்; கல்வியறிவு, நாகரிகம், போழுது, தன்னைக்காட்டிலும் சற்றே உயர்ந்த மரபு முதலியவைகளோடு கூடிய ஒரு கன்னிகையைத்தான் மணஞ் செய்யவேண்டுமென்ற நோக்கங் கொண்டிருந்தான்; அவன் சிவபாக்கியத்தின் கல்வியறிவு, நிறைகுணம், சீர்திருத்தம், போழுகு, சிறந்த மரபு என்னுமிவைகளைப்பற்றி நன்கு அறிவான்; சிவபாக்கியம் சிறுபிராயந் தொட்டு அவளுடைய மைத்துனன் நமசிவாயத்திற்கே விவாக நிச்சயஞ் செய்யப்பட்டிருக்கிறா ளென்பதை முன்னர் அறிந்திருந்தவிஜயரத்தினம், பின்னர் நமசிவாயம் கதி என்னவாயிற்றோவென அவன்பெற்றார்கவலைப் படுகின்றார்களென்பதையும், அவன் அகப்படாவழி, சிவபாக்கியத்திற்கு வேறு தக்க வரனைத்தேடி மணஞ் செய்ய அவளுடைய தாய்மாமன் முதலான சுற்றத்தார் யோசிக்கின்றனரென்பதையும்பின்னர்க்கேள்விப் பட்டான்.

### செல்வச் செருக்கு

அப்படியானால், சிவபாக்கியத்தைத் தனக்கு மணம் பேசுவித்தல் வேண்டுமென்றும் அவன் நோக்கங்கொண்டான்; இந்த விஜயரத்தினத்தின் மரபினருக்கும் சிவபாக்கியத்தின் மரபினருக்கும் எக்காலத்தாயினும் தொடர்பில்லை; இவன் மரபினரைச் சிவபாக்கியத்தின் மரபினர் சற்றுக் குறைந்தவர்களாகவே நினைத்து நடந்துவந்தார்கள்; ஆனாலும் விஜயரத்தினத்தை இப்பொழுது இப்படி மணஞ்செய்யத் தூண்டியது வேறொன்றுமல்ல, அவனிடத்திலிடையிட்டு வந்த பொருட் செருக்காகும். செல்வம் விரும்பத்தக்கது. ஆனாற் செல்வத்தையிட்டு வரும் செருக்கு வெறுக்கத்தக்கதாம்; ஏன்?

''சிறியரே மதிக்கு மிந்தச்
செல்வம்வந் துற்ற போது
வறியபுன் செருக்கு மூடி
வாயுளார் மூக ராவர்
பறியணி செவியு ளாரும்
பயிறரு செவிட ராவர்
குறிபெறு கண்ணி னாருங்
குருடராய் மூடிவ ரன்றே.''

விஜயரத்தினம் ஒருதினம் தன்வீட்டு மேன்மாடத்திலுள்ள ஒரு அறையில் தன் விவாக விஷயமாகத் தன்னந் தனியே வெகுநேரம் இருந்து யோசித்துவிட்டு, தன் வேலைக்காரனாகிய முத்தனைக் கூப்பிட்டு, ''நீ எங்கள் புரோகிதர் வீட்டிற்குப் போய், அவரை ''ஐயா'' அழைத்துவரச் சொன்னதாகச் சொல்லி அழைத்துவா'' என்று பணிக்க, முத்தன் 'ஓம் ஐயா இந்த நிமிஷமே அங்கே போய் அவரைக் கூட்டிவருகிறேன்'' என்று சொல்லி, விரைந்து புரோகிதர் வீட்டிற்குப் போய், அவரைக்கண்டு விஷயத்தைச் சொல்ல, ஐயர் உடனே புறப்பட்டு விஜயரத்தினத்திடம் வந்தார். வந்த புரோகிதரை விஜயரத்தினம் தக்கவாறு உபசரித்து இருக்கச்செய்து அவருடைய அநுமதிப்படி தானும் ஒரு நாற்காலியில் இருந்துகொண்டு, ஐயரை விநயமாகப் பார்த்து, ''சாமி உங்களால் எனக்கு ஆகவேண்டிய கருமமொன்றிருக்கிறது. உங்களாலன்றி வேறெவராலும் அந்தக் கருமம் கைகூடாதென்பது என் நம்பிக்கை; அதனைச் சொல்லத்தான் தங்களை இப்பொழுது அழைத்தேன் சொல்லலாமோ'' என்று கேட்டான்; ''ஆம் சொல்லலாம்; எம்மிடத்திற் சொல்லாமல் வேறு யாரிடத்திற் சொல்வது''என்று ஐயர்பதில்சொல்ல ''சாமீ, உங்களுக்கு விநாயகமூர்த்தியாருடன் அறிமுகமுண்டோ''என்று விஜயரத்தினம்கேட்க, ''அறிமுகமா? அவர்களுக்குப் புரோகிதர் நாம் தாமே'' என்றார் ஐயர், (வரும்)

### திருத்திக்கோள்க

[சென்றவார உலகம்பலவிதக் கதையில் 5-ம் பக்க 2 ம் பந்தியில் ''நிலத்தைப் பார்த்தவண்ணம் கள் சொல்ல'' எனத் தவறாய் வெளிவந்ததை ''மருமகள் சொல்ல'' எனத் திருத்திக் கொள்க.]

# சிறுமியை ஏமாற்றினன்

## காப்புத் திருடச் செய்த சூழ்ச்சி

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ் வித்தியாசாலையிற் கல்வி பயின்றுகொண்டிருந்த வண்ணார்பண்ணை சட்டநாதெரு வாசியான கந்தசாமியம் என்பவரின் புதல்வி ஞானேஸ்வரி என்னும் சிறுமியை, அதேயிடத்தைச் சேர்ந்த K. சுப்பிரமணியம் என்பவர் ஏமாற்றிக்கூட்டிக்கொண்டு போய் அச்சிறுமியின் கையிலிருந்த பொற்காப்புக்களை வெட்டி எடுத்து, அச்சிறுமியை அழவிடுத்துத் தப்பி ஓடிய சம்பவம் சென்ற வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் நீதிஸ்தலத்தில் கூறப்பட்டது.

குறித்த சிறுமி பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருந்தபோது, சுப்பிரமணியம் அங்கே வந்து அந்தச் சிறுமியின் சிறியதகப்பனார் இறந்துவிட்டதாகவும், சிறுமியைக்கூட்டிவரும்படி அச்சிறுமியின் பெற்றோர்தன்னிடம்கூறினர்என்றும் சொல்லி,ஆசிரியரின் அநுமதியுடன்சிறுமியை கூட்டிச்சென்று ஓர் ஒழுங்கைக்குள் அச்சிறுமியின் கைகளில் அணிந்திருந்த காப்புக்களை ஓர் குறட்டினால் வெட்டி எடுத்துக்கொண்டு மறைந்துவிட்டார், பிள்ளை அழுதுகொண்டுநாவலர்வீதிக்கு தெருப்பக்கமாக வந்து,நாவலர்வீதி ஐக்கிய சங்கக்கடைக்கு வர. அங்கிருந்த ஒருவர் பிள்ளை கூறிய விஷயத்தையறிந்து அதனைத் தகப்பனாரிடம்கூட்டிச்சென்றார், பின்னர் பிள்ளையின் தகப்பனாரும் மேற்படி பாடசாலைத் தலைமையாசிரியரும் இவ்விஷயத்தைப்பொலிசார்க்கு அறிவித்தனர்.

பொலிசார் உடன் விசாரணை புரிந்து எதிரியாகிய சுப்பிரமணியத்தை அகப்படுத்தினர், குறித்த பிள்ளையிடம் எதிரியைக் கூட்டிக்கொண்டு போனபோது, அப்பிள்ளை ''இவன் தான் காப்புக் கழற்றியவன்'' என்று கூறிற்று.

எதிரி தனது குற்றத்தை ஒப்புக்கொள்ளவே, நீதிபதி அவனுக்கு 2 மாதக் கடுங்காவற் சிறைத்தண்டனை விதித்தார்.

வெட்டியெடுக்கப்பட்ட காப்புக்களில் ஓர்பகுதி, பிள்ளையின் பெற்றாரிடம் திருப்பிக் கொடுக்கப்பட்டன.

# விவாகம்

### சிவபாதசுந்தரம் — பொன்மலர்

சண்டிருப்பாய் திரு, வீ. செல்லையா அவர்களின் புதல்வரும், குருநாகலைச் சேர்ந்த கிரியுல்லாவிலுள்ள அரசினர் வைத்தியசாலையில் ''அப்போதிக்கரி'' ஆகக் கடமை பார்ப்பவருமாகிய திரு. சிவபாதசுந்தரத்திற்கும், வண்ணார்பண்ணை ஐயனார் கோவிலடி, சட்டநாதர்தம்பி (பொன்னுச்சாமி) யவர்களின் புதல்வியும், யாழ்ப்பாணம் காணிப்பதிவுத்தானத்தில் நீடித்தகாலம் நிலையாகவிருந்து லேககராகக் கடமை பார்த்து இளைப்பாறியிருக்கும் திரு. சி. சபாரத்தினமவர்களின் பேர்த்தியுமாகிய திருவளர் செல்வி—பொன்மலரம்மாளுக்கும், சென்ற ஞாயிற்றுக்கிழமை (9-2-47) மாலை 5 மணிக்குமேல் நிகழ்ந்த சுபமுகூர்த்தத்தில், மணமகனில்லத்திற்றானே விவாகம் சிறப்புற நிறைவெய்தி அடுத்தநாளாகிய திங்கட்கிழமை அங்குதானே உபசாரணைக் கொண்டாட்டமும் நடைபெற்றது தம்பதிகள் சகல ஐசுவரியங்களையும் பெற்று இன்புற்று இனிது வாழும் வண்ணம் எல்லாம் வல்ல இறைவன் திருவருள் முன்னிற்க,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்க உத்தியோகத்தர்

## அவர்கள் ஆற்றவேண்டியபணி

இந்தியாவின் ஐக்கிய மாகாணத்துப் பிரதம மந்திரியான பண்டிதர் கோவிந்த வல்லபபந்த் சென்றவாரம் அம்மாகாண அபிவிருத்தி சம்பந்தமான உத்தியோகத்தர்க்கு ஓர் பிரசாரணம் புரிந்தார். காற்சட்டை, மேற்சட்டை அணிந்து தம்மைச் சாதாரண மனிதர்களிலும் வேருக மதித்துக் கொள்ளுவதால், இந்த உத்தியோகஸ்தர் தாம் கொண்ட கடமைகளைச் சாதிக்க முடியாது என்று பிரதமர் பந்த் கூறினர் அவர் இவ்விஷயமாக மேலும் கூறியதாவது:

"அரசாங்க உத்தியோகத்தராகிய உங்ளுக்கு ஊரவர்கள் அளிக்கும் பணத்திலிருந்தே வேதனம் அளிக்கப்படுகிறது: எனவே அவர்களுடைய ஊழியர் நீவிர் என்பதை நீங்கள் ஒவ்வொருவரும் நல்லாய்ச் சிந்தித்துக்கொள்ளுதல் வேண்டும். நம்நாட்டு மக்ககளில் துன்பமடைவோர்க்கு இன்பம் ஊட்டி, பலம் இழந்தவர்க்குப் பலம் கொடுத்து, இந்த நாட்டைச் செவ்வனே பரிபாலிக்க உதவி செய்வதே உங்கள் கடமையாகும் என்பபதை நீங்கள் உணரவேண்டும்.

"அரசாங்க உத்தியோகத்தில் இருப்பது ஏதோ இந்திர பதவியில் இருப்பது என்று எண்ணி நீங்கள், ஓர்போதும் கருமம்ஆற்றக்கூடாது. அப்படியான எண்ணம் இருக்குமேயானல் அதனை இன்றோடு ஒழித்துவிடவேண்டும். ஜனசமூக சேவையே உங்கள் லட்சியமாக இருத்தல் வேண்டும். நீங்கள் பொதுஜனங்களுடன் நன்கு ஊடாடி, அவர்களில் ஒருவராக உங்களையும் மதித்து, அவர்களுடைய நல்லெண்ணத்தையும் ஒத்துழைப்பையும் பெற முயற்சிசெய்தல் வேண்டும் அல்லாவிட்டால் நீங்கள் கொண்டுள்ள நோக்கம் கைகூடமாட்டாது.

"நீங்கள் உண்மையான சேவை செய்ய வேண்டுமானல், பொதுஜனங்கள் வேதனமாகத் தரும் பணத்துக்குத் தக்க வேலை செய்யவேண்டுமானல், பங்களாக்களில் காலந்தள்ளுவது மாத்திரம் போதாது. நீங்கள் வெளியே ஊரவர்களுடன் ஊடாடி, அவர்களுடைய சுகதுக்கங்களை ஆராய்ந்து அவற்றை அகற்ற முயற்சிசெய்யவேண்டும்".

# காரணம் என்ன?

## அரிசி விநியோக அளவுக் குறைவு

இலங்கையில் இப்போது ஏராளமாக இறக்குமதியாயுள்ள தானியங்களைத் திணிப்பதற்காகவே, அரிசி அளவு ஒருபடியாகக் குறைக்கப்பட்டது என்ற ஓர் அபவாதம் சிலராற் சாட்டப்பட்டிருக்கிறது. இந்த அபவாதத்துக்கு ஆதாரமில்லையென்று உணவுப்பகுதி அதிகாரி தெரிவிக்கின்ருர்.

"வரவேண்டிய காலத்துக்குச் சில கப்பல்கள் வராமையினுலும், எங்களுக்கு நெல் அரிசி தரவேண்டிய நாடுகளில் உள்நாட்டுக் குழப்பங்கள் ஏற்பட்டிருப்பதினுலுமே இப்படியாக அரிசிவிநியோக அளவை நாம் குறைக்கவேண்டிவஏற்பட்டது" என்றுமேற்படி அதிகாரி தெரிவிக்கிருர்.

மாவின் நிலைமை திருப்திகரமாக இருக்கிறது என்று இன்னோர் உணவுப்பகுதி அதிகாரி தெரிவிக்கிருர்.

அரிசி பழையபடி 1½ படியாக எப்போது கொடுக்கப்படும் என்று ஓர் பத்திரிகை நிருபர் கேட்டதற்கு ஷை உத்தியோகத்தர் "அதனை இப்போது சொல்லமுடியாது" என்ருராம்.

தானிய வகைகளைவிட, பெருந்தொகையான பேரீச்சம் பழங்களும் இலங்கையிற் சென்ற சில தினங்களில் இறக்குமதியா யிருக்கின்றன. அப்பிள் பழங்களும், முந்திரிகைப் பழங்களும் ஏராளமாக இன்னும்சில தினங்களில் இறக்குமதியாகுமாம்.

## ரங்கூனில் வேலைநிறுத்தம்

றங்கூனில் துறைமுகத் தொழிலாளா வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர். இதன் பயனுகத் துறைமுகத்நில் ஏற்றுமதி இறக்குமதி யாவும் ஸ்தம்பித்துவிட்டன,


### தந்தரோகசஞ்சீவி

கந்தசாமி வைத்தியர்

### சந்தனுதித் தயிலம்

ஒரு கிழமைக்கு வைக்கக்கூடிய
ஒரு அவுன்சு தயிலம் விலை ரூ. 2

ஒவ்வொருநாளும் ஒருசதவீதம் வைத்துக் கடைசியன்று சீயாக்காய் வெந்தயம் அவித்துத் தப்பி வென்னீரில் தோய்வது. பத்தியம்: புகையிலையாகாது ஆடினபல்லு உடனே இறுகும், முரசு வளரும், வாய்ப்புண் வீக்கம் தொண்டைப்புண் கம்மல் இருமல் கபாலம் பீனிசம் மாற்றும் உத்தரவாதமுடையது. ஒரு தடவை வேண்டிப் பாவித்து அறியலாம்.

நெருப்புச்சுடு முதல் எந்த வேக்காட்டிற்கும் பூச உடனே வேதனை தணியும்.

வீ. பீ. பீ. யிலும் அனுப்புவோம்.
சீசா முதலிய செலவு வேறு.

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை

வல்வை நரசிங்க வைரவாலயத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

Mis. 211 1.11-46—30-4-47 (வெ)

### பசந்த லேகியம்

இதனல் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும், இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருருத்தல் விலை ரூபா 25
அரைருத்தலுக்கு ரூபா 12-50
கால்ருத்தல் ரூபா 6-25

விலாசம்:

க. ஆறுமுகம்பிள்ளை
இ. 156, செக்கடித்தெரு கொழும்பு

Mis 25 23-4-46 to 22-3 47)

வியாபாரத்திற்கழகு
விளம்பரஞ் செய்தல்

### India Super Tyres and Tubes

### இந்தியா சுப்பர் ரையர் & ரியூப்

கார் லொறி சைஸ்கள்

ரையர் கட்டுப்பாடு நவம்பர் மாசம்
21-ந் உடன் முடிவடைந்து விட்டது.

எங்களிடம் சொற்பதொகையே இருப்பதால் தேவையானதற்கு இப்பொழுதே உங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுங்கள்.

C. S. Nadarajah Chetty,
41, K. K. S. Road, JAFFNA.

Mis 257 3-12—28-2-47


# மனவாசகம் கடந்தான்

[ சே. வே. ஜம்புலிங்கப்பிள்ளை ]

கடவுளின் பரியாயப்பெயரில் இது ஒன்று. கடவுள் வாக்கு மனுதீதாராயின் அவரது உண்மையை அறிதலும் அவரிடத்தே அன்பு செலுத்தலும் எங்ஙனம் என்னும் கேள்வி பிறக்கலாம். அவருடைய தன்மையையெல்லாம் யாம் ஒன்ருெழியாது ஒருங்கே யளந்தறிந்து அவர் இத்தகையினரென்று முற்றுமறிந்து நிச்சயிக்கக் கூடாமையால் அவர் வாக்கு மனங்கட்குத் தோன்ருதா ரென்பதன்று. வாக்கு மனங்கட்கு முற்றும் அமையாதாரென்பதேயாம்.

இனி எமது அறிவுக்கு எட்டாத ஒரு பொருளை யாம்அறிதலும் போற்றுதலும் எப்படி என்று கேட்கலாம். பீசகணித அறிவு ஒருசிறுவனது அறிவுக்கு அதீதமாயினும் அங்ஙனம் கடினமான ஓர் நூலுண்டென்னும் அவ்வுணர்ச்சி அச்சிறுவனுக்குப் புலப்படுதலே போதியது. அதுபோக கடவுள் இலக்கணங்கள் எமது அறிவுக்கு அமையாவாயினும் அவ்விலக்கணங்களையுடைய ஒருவருளர் என்னும் உணர்ச்சி எமது அறிவுக்கு அமைதலும் நாம் அதனை விசுவசித்தலும் போதுமானது.

கடவுள் சிலருக்கு வெளிவந்து புலப்படுவதாக நமது நூல்கள் கூறுகின்றனவே, வாக்கு மனுதீதர் அங்ஙனம் புலப்படுமாறு யாங்ஙனமெனின் கடவுள் சிலருக்கு வெளிவந்தவளவிலே அவருடைய இலக்கணங்களெல்லாம் ஒருங்கே அளவிட்டு அறிந்துகொள்ளப்படமாட்டா, ஆதலால் அவருடைய வாக்கு மனுதீத இலக்கணம் பிழைபடல் இல்லை, கடவுள் வாக்கு மனுதீதராயினும் தமது அடியவருட் சிறந்தவர்க்குத்தாம் ஒருவாறு புலப்படும், ஓர் அருங்குணமுடையார்; இங்ஙனம் ஒருவாறுபுலப்படல் ஒருங்கேபுலப்படல் ஆகாது ஆகாதபோது அவருடைய வாக்கு மனுதீத இலககணமும் அருங்குணமும் மாறுபடாமை காணலாம். பின்வரும் ஆன்ருேர் பாடல்கள் இங்கே சிந்திக்கற்பாலன.

1. "மனவாசகங்கடந்தான் எனைமத்
 தோன்மத்தனுக்கி" (திருவாசகம்)
2. மறைகளின் முடிவான் வாக்கால்
 மனத்தினு லளக்கொணுமல்
 நிறைவுடன் யாண்டுமாகி
 நின்றிடு நிமல மூர்த்தி.
 (கந்தபுராணம்)
3. மறையினு லயனுன் மாலான்
 மனத்தினுல் வாக்கால் மற்றுங்
 குறைவிலா வளவை யாறுங்
 கூருெணு தாகிநின்ற
 இறைவனர் கமல பாதம்.
 (சிவஞானசித்தியார்)


### NEW IRON SAFES FOR SALE

### புதிய இரும்புப் பெட்டிகள்

விற்பனைக்கு வந்துவிட்டன

யுத்த காலத்திற்குப்பின் இதுவே முதல் இறக்குமதி

வியாபார ஸ்தலங்களுக்கும், வீடுகளுக்கும், அடைவுகடைகளுக்கும் பாவிப்புக்கு ஏற்றஅளவுகளில் குறைந்தவிலையில்திறமான நூதனபூட்டுக்கள்அமைக்கப்பெற்ற இரும்புப்பெட்டிகள் விற்பனைக்குத் தயாராக இருக்கின்றன. தங்களுக்குத் தேவையான பெட்டிகளை கீழ்க் காணும் விலாசத்தில் நேரில் பார்த்து தெரிந்து கொள்ளுங்கள்.

ஸ்ரீ பத்மநாத ஸ்ரோர்
பெரியகடை, யாழ்ப்பாணம்.

Tele {Phone 68
 {grams SIRIRANGAN

S. S. PONNUDURAI
Siri. Pathmanatha Store
105. K K. S. ROAD
Grand Bazaar JAFFNA.

Mis 270 13.12 46—12-3-47


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Friday, February, 14, 1947.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org